Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 163/2023** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | அருணாச்சலம் |
| Father/Husband Name | : | நாகுசாமி |
| Village | : | நடராஜபுரம், ராமேஸ்வரம் |
| Taluk | : | ராமேஸ்வரம் |
| Calling | : | மீன்பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.02.2026

( 1, 5 மற்றும் 11 எதிரிகள் ஆஜரில்லை, 1, 5 மற்றும் 11 எதிரிகள் தரப்பில் BNSS –355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம், நடராஜபுரத்தில் வசித்து வருகிறேன். மீன்பிடித்தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன முகேசை தெரியும். சாட்சிகள் சக்திகுமார், முனீஸ்வரன், நம்பீஸ்வரன், முனியசாமி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளாக பாலமுருகன், புஷ்பராஜ், ஓட்டைக்காது பாலா ஆகியோர்களை தெரியும். கடந்த 05.04.2023 ம் தேதி மதியம் 03.45 மணியளவில் நான், முகேஷ், நம்பீஸ்வரன் ஆகியோர்கள் அன்றையதினம்

பங்குனி உத்திரம் என்பதால் இராமேஸ்வரம் மேலவாசலலில் உள்ள முருகன் கோவிலுக்கு சாமிகும்பிட்டு திரும்பி ராமேஸ்வரம் 6 ம் நம்பர் தேவர்சிலை அருகே வந்து கொண்டிருந்தோம். அப்போது தேவர்சிலை அருகே சாட்சிகள் சக்திகுமார், நம்பீஸ்வரன், முனிஸ்வரன், வீரபிரகாஷ், முனியசாமி ஆகியோர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். அப்போது எங்களுடன் வந்த முகேஷ் சாட்சி சக்தி குமாரை பார்த்து என் மாப்ள இன்னும் வீட்டுக்கு போகம இருக்க என்று கேட்டார், அதற்கு சக்திகுமார் 6 அடையாளம் தெரியாத நபர்கள் என்னை அடித்துப்போட்டுவிட்டு எனது Realme செல்போனை பறித்துவிட்டு சென்றுவிட்டதாக சொன்னார். முகேஷ் அதற்கு அங்கிருப்பவர்களை அங்கேயே இருக்க சொல்லிவிட்டு நான், முகேஷ், நம்பீஸ்வரன், சக்திகுமார் ஆகியோரும் மாந்தோப்புக்கு சக்திகுமார் சொன்னதை வைத்து மாந்தோப்புக்கு நாங்கள் சென்றோம். அங்கிருந்த ஒரு பெரியவரிடம் சக்திகுமார் செல்போனை பறித்து சென்ற நபரை கேட்டோம். அதற்கு அந்த பெரியவர் அந்த நபர் இங்கில்லை, பெரிய பள்ளிவாசல் பக்கம்போய் பாருங்கள் என்று சொன்னார். அதன் பிறகு நாங்கள் அங்கு சென்றோம். அப்போது அங்கு ஆஜர் எதிரிகள் மற்றும் ஆஜரில்லாத 3 எதிரிகளான பாலமுருகன், புஷ்பராஜ், ஓட்டைக்காது பாலா என மொத்தம் 12 எதிரிகள் இருந்தார்கள். அப்போது எதிரி பாலா எங்களை பார்த்து புதுரோட்டு தேவுடியா புண்டாமயன்க இந்தா வந்துருக்காங்கடா, இவங்கள அடிச்சு கொல்லுங்கடா என்று சொன்னார். அப்போது எதிரிகளின் கையில் கம்பு, பாட்டில், கல், கட்டை ஆகிய ஆயுதங்களை கையில் வைத்திருந்தார்கள். அப்போது எதிரிகள் முகேசை தள்ளிவிட்டார்கள், முகேஷ் மல்லாக்க கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த முகேசின் இடதுபக்க நெஞ்சுப்பகுதியில் கீழே கிடந்த ஹலோ பிளாக் கல்லை எடுத்து முகேசின் நெஞ்சில் அடித்தார். எதிரி ராம்கி பிராந்தி பாட்டிலை உடைத்து முகேசின் நெஞ்சில் குத்தினார். மற்ற எதிரிகள் முகேசை சாவுடா என்று சொல்லிக்கொண்டே காலால் மிதித்தார்கள். அதை சக்திகுமாரும், நம்பீஸ்வரனும் தடுத்தார்கள். எதிரி புஷ்பராஜ் கம்பியால் நம்பீஸ்வரனின் பின்பக்கதலையில் அடித்துவிட்டார். அதனால் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னையும், என்னுடன் வந்த முகேஸ், நம்பீஸ்வரன், சக்திகுமார் ஆகியோர்களை கையில் உள்ள கம்பு, கட்டையால் அடித்தார்கள். அதனால் எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. காயம்பட்டுகிடந்த முகேசுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனே ராமேஸ்வரம் அரசு

மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். அவருக்கு உடல்நிலை மிகவும் முடியாமல் இருந்ததால் துறைமுகம் காவல் நிலையத்தில் முகேஷ் புகார் கொடுத்தார். பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். அவருடன் காயம்பட்ட நம்பீஸ்வரனையும் சிகிச்சையில் சேர்த்தார்கள். அதன் பிறகு முகேசுக்கு ரொம்ப சீரியசாக இருந்ததால் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்று 10.04.2023 ம் தேதி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஹலோபிளாக் கல் எதிரி பாலா முகேசை தாக்கிய ஹலோ பிளாக் கல்தான். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் உடைந்த பிராந்தி பாட்டிலை வைத்துதான் எதிரி ராம்கி முகேசை தாக்கினார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கம்பியை வைத்துத்தான் எதிரி புஷ்பராஜ் நம்பீஸ்வரனை தாக்கினார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

இறந்துபோன முகேஷ், சாட்சிகள் நம்பீஸ்வரன், சக்திகுமார், முனீஸ்வரன், வீரப்பிரகாஷ், நம்பீஸ்வரன், முனியசாமி ஆகியோர்கள் நடராஜபுரம், புதுரோட்டை சேர்ந்த அம்பலக்காரர்கள் என்றால் சரிதான். சாட்சி முனீஸ்வரனும், நம்பீஸ்வரனும் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். எங்கள் அனைவருக்கும் கடல்தொழில்தான் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் ஒரு சமூகத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்றும், ஒரே தெருவை சேர்ந்தவர்கள் அல்ல என்றும் சொன்னால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்பாக எனக்கும், இந்த எதிரிகளுக்கும் எந்தவிதமாக முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். நடராஜபுரம், புதுரோட்டிலிருந்து இராமநாதசாமிமேலவாசல் முருகன் கோவிலுக்கும் இடையே சுமார் 8 கிமீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் பங்குனி உத்திரம் திருவிழா என்பதால் எங்கள் ஊரை சேர்ந்த ஆயிரம் நபர்களுக்கு மேல் முதியோர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் கோவிலுக்கு சென்றோம் என்றால் சரிதான். பங்குனி உத்திரம் திருவிழாவில் வேல் குத்தி செல்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்சொன்ன சாட்சிகளாகிய நாங்கள் அனைவரும் குத்தி முருகன் கோவிலுக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் காலை 08.00 மணி அளவில் நடைபயணமாக கோவிலுக்கு சென்றுவிட்டு மதியம் 12.00 மணியளவில்

அவரவர் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். சாமி கும்பிட்ட பின்னர் சிலபேர் பாம்பனுக்கு சென்று அங்குள்ள மதுக்கடையில் மதுவாங்கி மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். மேற்சொன்ன சாட்சிகளாகிய எங்களில் சிலநபர்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று மது அருந்தினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் மதுஅருந்திவிட்டு சென்றதால்தான் மதியத்திற்குள் வீட்டிற்கு செல்லாமல் ஊரைச்சுற்றிக்கொண்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் கோவிலுக்கு செல்லும்போதும், திரும்பி வரும்போதும் சாமி கும்பிட வந்த பெண்களை கேலிகிண்டல்கள் செய்து கொண்டு சென்றோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் கேலிகிண்டல்கள் செய்து சென்றதால் எங்கள் ஊரைச் சேர்ந்த பெரியோர்கள் எங்களை கண்டித்தார்கள் என்றும், அதை வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. இராமேஸ்வரம் தேவர்சிலையிலிருந்து இராமேஸ்வரம் ரயில் நிலையத்திற்கு ஒருரோடும், இராமநாதசுவாமி கோவில் நோக்கி ஒருரோடும், தனுஷ்கோடிக்கு ஒருரோடும், சற்று தள்ளி துறைமுகத்திற்கு செல்லும் ஒருரோடும் செல்கிறது என்றால் சரிதான். ரயில்நிலையத்திற்கு செல்லும் ரோடும், துறைமுகத்திற்கு செல்லும் ரோடும் வேறுவேறு என்றால் சரிதான். சாட்சி சக்திகுமார் எவ்வளவு நேரமாக ரயில்நிலையம் செல்லும் ரோட்டில் நின்று கொண்டிருந்தாரா அல்லது துறைமுகத்திற்கு செல்லும் ரோட்டில் நின்று கொண்டிருந்தாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தேவர்சிலையிலிருந்து புதுரோட்டுக்கு செல்வதற்கு மாந்தோப்பு வழியாகவோ, பள்ளிவாசல் வழியாகவோ செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். அப்துல்கலாம் அய்யா வீட்டிற்கு அருகில் பள்ளிவாசல் தெரு உள்ளது என்றால் சரிதான். பள்ளிவாசல் தெரு சம்பவ இடத்திற்கு வடக்கே உள்ளது என்றால் தெற்கேயும் ஒரு பள்ளிவாசல் தெரு உள்ளது. மாந்தோப்பு சம்பவ இடத்திலிருந்து 2 கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல, அரை கிமீ தூரத்தில்தான் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து மாந்தோப்பு எவ்வளவு தொலைவில் உள்ளதோ அதேதொலைவில்தான் துறைமுக காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் செல்போனை காணவில்லை என்று தேடிச்சென்றபோது நான் உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின்போது நானும் செல்போனை தேடி உடன் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. செல்போனை யார் பறித்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல்

இவ்வழக்கு சம்பவம் நடப்பதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பாக செல்போன் பறித்து செல்லப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அடையாளம் தெரியாத நபர்தான் செல்போனை பறித்துசென்றார்கள் என சக்திகுமார் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் என்னை அழைத்து சென்று பறித்த நபரை காட்டினார். சம்பவம் நடந்த இடத்திலிருந்து அரசு மருத்துவமனை அரை கிலோ மீட்டர் துாரத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் கொடுத்தார் என்று எனக்குதெரியாது என்று சொன்னால் சரியல்ல, முகேஷ்தான் கொடுத்தார். புகாரை காவல் நிலையத்திற்கு சென்று கொடுத்தது யார் என்றால் நான்தான். சம்பவ இடத்திலிருந்து முகேசை நாங்கள் அழைத்து செல்லும்போது அவர் பேசக்கூடிய நிலையில்தான் இருந்தார் என்றால் கொஞ்சம் பேசக்கூடிய நிலையில் இருந்தார். நான் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேனா என்றால் ஆமாம் என சாட்சி கூறிவிட்டு சாட்சி பிறகு நடந்து சென்றதாகவும் சாட்சிகள் நம்பீஸ்வரன், சக்திகுமார் ஆகிய இருவரும்தான் முகேசை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றதாக கூறுகிறார். மாந்தோப்புக்கு நாங்கள் அனைவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றும், 10 நபர்கள் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல, மொத்தம் 4 நபர்கள் மட்டுமே மாந்தோப்புக்கு சென்றோம், அதில் 3 நபர்கள் ஒரு இருசக்கர வாகனத்திலும், நான் நடந்தும் சென்றோம். நாங்கள் புகார் கொடுத்த உடனே போலிசார் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். முகேசுக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் சரியல்ல, அவன் 12ம் வகுப்புவரை படித்துள்ளான். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. இறந்துபோன முகேசுக்கும் மதுஅருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. அதேபோல் நம்பீஸ்வரன், சக்திகுமார் ஆகியோர்களுக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. சக்திகுமார் கோவிலுக்கு சென்றுவிட்டு வந்து மதுஅருந்திவிட்டு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் நின்று கொண்டு பலபெண்களை கேலிகிண்டல் செய்தார் என்றும், அதன் அடிப்படையில் வேறுயாரோ நபர்கள் தாக்கி அடித்ததில் முகேஷ்க்கும் மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றும், அதனால்தான் காவல் நிலையம் சென்று புகார் அளிக்காமல் மருத்துவமனை சென்றார்கள் என்றும், அவர்கள் எனக்கு உறவினர்கள் என்பதால் கூட இருந்து பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால்தான், எனக்கும்

காயங்கள் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன முகேஷ் மற்றும் மற்றவர்கள் எனக்கு உறவுக்காரர்கள் என்பதால் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் எதிரிகளுக்கு விரோதமாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 1ம் எதிரி மற்றும் மற்ற எதிரிகள் கல், கம்பு, கம்பியால் தாக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்த நபருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் இந்த எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு ஆலோசனையின்பேரில் கொடுக்கப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.